DINAKARAN புதன்கிழமை 29.2.2012

## மெட்ரோ ரயில் பணிக்காக 3ம்தேதி முதல்

# அண்ணா சாலையில் போக்குவரத்து மாற்றம்

சென்னை, பிப். 29: மெட்ரோ ரயில் பணிக்காக அண்ணா சாலையில் 3ம்தேதி முதல் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

இது தொடர்பாக சென்னை போக்குவரத்து போலீசார் நேற்று வெளியிட்ட அறிக்கை:

அண்ணா சாலை எல்.ஐ.சி மற்றும் ஆயிரம் விளக்கு பகுதிகளில் மெட்ரோ ரயில், சுரங்க ரயில் நிலையம் அமைக்கும் பணி நடைபெற இருப்பதால் மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் வாகனங்கள் சீராக செல்ல ஏதுவாக வரும் 3ம் தேதி முதல் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படுகிறது.

அதுபற்றிய விவரம் வருமாறு:

* அண்ணா சாலையில் திரு.வி.க. சாலை சந்திப்பு முதல் வெலிங்டன் சாலை சந்திப்பு வரை ஒருவழி பாதையாக மாற்றப்படுகிறது. இச்சாலையில் ஒயிட்ஸ் ரோடு சந்திப்பிலிருந்து எல்.ஐ.சி நோக்கி வரும் வாகனங்கள் அனுமதிக்கப்படும். வெலிங்டன் சந்திப்பிலிருந்து அண்ணா மேம்பாலம் நோக்கி வாகனங்கள் செல்ல தடைசெய்யப்படுகிறது.

* தற்போது ஜி.பி. (ஜெனரல் பீட்டர்ஸ்) சாலையில் நடைமுறையில் உள்ள ஒருவழி பாதை மாற்றியமைக்கப்பட்டு வெலிங்டன் சந்திப்பிலிருந்து வாகனங்கள் அனுமதிக்கப்பட்டு ராயப்பேட்டை மணிக்கூண்டிலிருந்து வாகனங்கள் வெலிங்டன் சந்திப்பு நோக்கி செல்ல தடைசெய்யப்படுகிறது.

* ஒயிட்ஸ் சாலை ஒரு வழி பாதையாக மாற்றப்படுகிறது. இச்சாலையில் ராயப்பேட்டை மணிக்கூண்டிலிருந்து வரும் வாகனங்கள் அனுமதிக்கப்படும். அண்ணாசாலையிலிருந்து வாகனங்கள் வர தடை செய்யப்படுகிறது.

* பட்டுல்லாஸ் சாலை ஒருவழி பாதையாக மாற்றப்படுகிறது. இச்சாலையில் ஸ்பென்சர் சந்திப்பிலிருந்து வரும் வாகனங்கள் அனுமதிக்கப்படும். ஒயிட்ஸ் சாலையிலிருந்து வாகனங்கள் வர தடை செய்யப்படுகிறது.



* ஸ்மித் ரோடு ஒரு வழி பாதையாக மாற்றப்படுகிறது. இச்சாலையில் ஒயிட்ஸ் ரோடு சந்திப்பிலிருந்து வாகனங்கள் அனுமதிக்கப்படும். அண்ணா சாலையிலிருந்து வாகனங்கள் வர தடை செய்யப்படுகிறது.

* அண்ணா மேம்பாலத்திலிருந்து அண்ணா சிலை நோக்கி வரும் வாகன போக்குவரத்தில் மாற்றம் ஏதும் இல்லை.

* அண்ணா சிலையிலிருந்து ஜெமினி அல்லது தேனாம்பேட்டை நோக்கி செல்லும் வாகனங்கள் வெலிங்டன் சாலை சந்திப்பில் திருப்பப்பட்டு ஜி.பி ரோட்டில் சென்று ஒயிட்ஸ் ரோடு வழியாக அண்ணா சாலையை வந்தடையலாம்.

* அண்ணா சிலையிலிருந்து பின்னி சாலை நோக்கி செல்லும் வாகனங்கள் வெலிங்டன் சந்திப்பில் திருப்பப்பட்டு ஜி.பி ரோட்டில் சென்று ஒயிட்ஸ் ரோடு, ஸ்மித் ரோடு, அண்ணா சாலை வழியாக பின்னி சாலையை வந்தடையலாம்.

* பாரதி சாலையிலிருந்து (ஜாம்பஜார்) அண்ணா சாலை நோக்கி வரும் வாகனங்கள் ஒயிட்ஸ் ரோடு, ஸ்மித் ரோடு வழியாக அண்ணா சாலையை வந்தடையலாம்.

* ராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலிருந்து (வெஸ்ட்காட் ரோடு) அண்ணா சாலை நோக்கி செல்லும் வாகனங்கள் ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகே கட்டாயமாக இடதுபுறம் திரும்பி ஒயிட்ஸ் ரோடு, ஸ்மித் ரோடு வழியாக அண்ணா சாலையை வந்தடையலாம்.

* பின்னி சாலையிலிருந்து சத்யம் திரையரங்கு அல்லது ஜெமினி மேம்பாலம் நோக்கி செல்லும் வாகனங்கள் பட்டுல்லாஸ் சாலை, ஒயிட்ஸ் சாலை வழியாக தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு செல்லலாம்.

* பின்னி சாலையிலிருந்து பாரதி சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை அல்லது ராயப்பேட்டை நோக்கி செல்லும் வாகனங்கள் உட்ஸ் ரோடு, ஜி.பி ரோடு, ராயப்பேட்டை மணிக்கூண்டு வழியாக சென்றடையலாம்.

* கிரீம்ஸ் சாலையிலிருந்து ஜெமினி மேம்பாலம் நோக்கி செல்லும் வாகனங்கள் திரு.வி.க சாலை, ஒயிட்ஸ் சாலை வழியாக அண்ணா சாலையை சென்றடையலாம்.

வாகன ஓட்டுனர்களுக்கு இந்த போக்குவரத்து மாற்றத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால் சில நாட்கள் பயன்பாட்டிற்கு பிறகு மக்கள் கருத்து அறிந்து மாற்றப்படும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.